# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 12

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் வல்லின மெய் எழுத்துக் கூட்டம்

அ) ய் ர் ல் வ் ழ் ள் ஆ) க் ச் ட் த் ப் ற்

இ) ங் ஞ் ண் ந் ம் ன் ஈ) க் ட் ச் த் ப் ண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. நால்வருணப்பாகுபாட்டைத் தமிழரிடையே புகுத்தியவர்

அ) சிங்களவர் ஆ) ஐரோப்பியர் இ) ஆரியர் ஈ) திராவிடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தஞ்சைப் பெருங்கோயிலைக் கட்டுவித்த மன்னன்

அ) இராசேந்திர சோழன் ஆ) பராந்தகசோழன்

இ) குலோத்துங்க சோழன் ஈ) இராசஇராசசோழன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. திருக்குறளில் ஒழுக்கமுடைமை என்ற அதிகாரத்திற்கு முன்னுள்ள அதிகாரம்

அ) வெகுளாமை ஆ) அடக்கமுடைமை இ) மானம் ஈ) நட்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றுள் பகுசொல் அல்லாதது

அ) மலர் ஆ) தமிழன் இ) கலைஞர் ஈ) உண்டான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. 'ஒற்றுமையே வலிமை' என்ற கருத்தை விளக்கும் பழமொழி

அ) முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்

ஆ) சிறுதுளி பெருவெள்ளம்

இ) கடுகு சிறிது காரம் பெரிது

ஈ) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. 'சுரும்பு ஆர் தேறல் சுற்றம் மறப்ப' என்பதில் சுரும்பு என்றால்

அ) மயில் ஆ) வண்டு இ) குயில் ஈ) மான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. தலையலங்கானத்துப் போரில் எழுவருடன் போரிட்ட பாண்டிய மன்னன்

அ) கரிகாலன் ஆ) பெருவழுதி

இ) நெடுஞ்செழியன் ஈ) கரிகாற் பெருவளத்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. நிலவியற்கைப் பகுப்பின்படி கருப்பொருள் என்பது

அ) நிலமும் பொழுதும் ஆ) நிலைத்திணைகளும் விலங்குகளும்

இ) தொழிலும் பொருளியலும் ஈ) பொழுதும் தொழிலும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. முல்லை மலர் மலரும் நிலம்

அ) காடும் காடு சார்ந்த இடம் ஆ) மலையும் மலை சார்ந்த இடம்

இ) வயலும் வயல் சார்ந்த இடம் ஈ) கடலும் கடல் சார்ந்த இடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தென்றல் வீசுவது

அ) வடக்கிலிருந்து ஆ) தெற்கிலிருந்து இ) மேற்கிலிருந்து ஈ) கிழக்கிலிருந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. 'கழுநீர் ஆம்பல் முழு நெறிக் குவளை' எனத் தொடங்கும் தென்றல் வரவு பற்றிக் கூறும் பாடலைப் பாடியவர்.

அ) கண்ணதாசன் ஆ) கம்பர் இ) பாவேந்தர் ஈ)இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. விழு என்ற வினையடியை வினை எச்சமாக மாற்றினால்

அ) விழுந்தான் ஆ) விழுந்தது இ) விழுந்து ஈ) விழுந்த

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. **குறள் :** - நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்

என்றும் ..................... தரும்

அ) இடும்பை ஆ) துன்பம் இ) இன்பம் ஈ) ஒழுக்கம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பெரும் பொழுதில் அடங்கும் இளவேனிற் காலத்திற்குரிய திங்கள்

அ) மாசி பங்குனி ஆ) சித்திரை வைகாசி

இ) மார்கழி தை ஈ) ஆவணி புரட்டாதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பின்வருவனவற்றுள் நீர்ப்பூ அல்லாதது.

அ) குவளை ஆ) கொன்றை இ) தாமரை ஈ) அல்லி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. கி.பி 6 தொடக்கம் 9ம் நூற்றாண்டுவரை தமிழகத்தை ஆண்டவர்கள்

அ) சோழர் ஆ) நாயக்கர் இ) ஐரோப்பியர் ஈ) பல்லவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. கார்த்திகை பூத்தது. இதில் வந்துள்ள ஆகு பெயர்,

அ) பொருளாகுபெயர் ஆ) சினையாகுபெயர்

இ) காலவாகுபெயர் ஈ) குணவாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பொதுப் பெயரோடு சிறப்புப் பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) வாழை மரம் ஆ) வள்ளல் பாரி இ) சாரைப்பாம்பு ஈ) தமிழ்மொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ‘பதிஎழு அறியாப் பழங்குடி’ என்று போற்றப்பட்ட குடி

அ) தமிழ்க்குடி ஆ) ஆரியக்குடி இ) சிங்களக்குடி ஈ) வடவர்குடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. சேவல்கள் சிறகடித்துக் கூவிக் கதிரவனை வா! வா! என அழைத்தன. இதில் வந்துள்ள அணி

அ) உயர்வுநவிற்சி அணி ஆ) உவமை அணி

இ) தற்குறிப்பேற்ற அணி ஈ) உருவக அணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பின்வருவனவற்றுள் அடுக்கிடுக்குத் தொடர்

அ) விடியவிடிய ஆ) நடுநடுங்கி இ) கணீர்கணீர் ஈ) அருமைபெருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. கரிகாற் சோழன் ______________________ மன்னன்.

அ) கழகக்காலத்து ஆ) பல்லவர் காலத்து

இ) நாயக்கர் காலத்து ஈ) ஐரோப்பியர் காலத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. புன்னுனி என்பதைப் பிரித்தால் வருவது.

அ) புன் + னுனி ஆ) புன் + நுனி

இ) புல் + னுனி ஈ) புல் + நுனி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வெளிப்படையாகப் பேசுபவன் என்பதைக் குறிக்கம் மரபுத்தொடர்

அ) ஓட்டைக் கையன் ஆ) ஓட்டை வாயன்

இ) அடுத்துக் கெடுப்பவன் ஈ) காலை வாருபவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. இலங்கை சோழரின் ஆட்சியுடன் இணைந்திருந்த காலம்

அ) 60 ஆண்டுகள் ஆ) 75 ஆண்டுகள்

இ) 80 ஆண்டுகள் ஈ) 90 ஆண்டுகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. மணிப்பிரவாளம் என்ற சொல் குறிப்பது

அ) தமிழும் வடமொழியும் ஆ) வடமொழியும் எலுவும்

இ) ஆங்கிலமும் தமிழும் ஈ) தமிழும் பாளியும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. மாறனில் உயர்ந்தோன் வேலன். இச் சொல்லியத்தில் இடம் பெற்றுள்ள வேற்றுமை.

அ) ஆறாவது ஆ) ஐந்தாவது இ) மூன்றாவது ஈ) ஏழாவது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன

அ) நானிலம் ஆ) நாற்றிக்கு இ) நாற்குணம் ஈ) நால்வருணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. கேரளம் என்று இன்று அழைக்கப்படும் நாடு

அ) சோழநாடு ஆ) சேரநாடு இ) பாண்டியநாடு ஈ) தமிழ்நாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. ஆரியர் தமிழரிடையே புகுத்திய திருமண வழக்காறுகள் எவை?

2. மதிக்காக எடுக்கப்படும் விழாவை எப்படி அழைப்பர்?

அது எக்காலத்தில் எடுக்கப்படும்?

3. "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்

கல்லார் அறிவிலா தார்"

இக்குறளின் பொருளைத் தருக.

4. வடக்கிருத்தல் என்றால் என்ன? வடக்கிருந்து உயிர்நீத்த மன்னன் யார்?

5. கள்ளிச் செடிக்குப் பாலை என்ற பெயர் ஏன் வந்தது?

6. கல்வி பற்றி மனு நூல் கூறுவது யாது?

______________________________________________

______________________________________________

7. சோழர் இலங்கை மீது போர் தொடுக்கத் தூண்டுகோலாக இருந்த கரணியங்கள் இரண்டு தருக.

______________________________________________

______________________________________________

**புள்ளிகள் 10**

## 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பளிங்கு போன்ற தூய்மையான உள்ளம் படைத்த இணையர் அவர்களுக் கென்று அமைந்த தனித்த மாளிகையில் இல்லறம் என்ற நல்லறம் நடத்துகிறார்கள். இந்த இளம் பெண்ணைப் பெற்ற தாய் தன் அன்பு மகளை நினைத்து ஏங்குகின்றாள்.

விளையாட்டுக் குழந்தை எங்கே! இல்லறம் எங்கே! கணவனுடன் கருத்தொருமித்து நடக்க இவள் கற்கவில்லையே என்று கலங்குகின்றாள். பெற்ற தாயின் கலக்கத்தை நீக்கும் பொருட்டு, வளர்த்த தாயாகிய செவிலித்தாய் இணையரின் மனைக்குச் செல்கிறாள். சென்றவள் அங்கே கண்டது இது. அந்தச் சின்னஞ்சிறிய பெண் அந்தப் பென்னம் பெரிய மாளிகையில் எத்தனையோ பேர் ஏவலர்கள் இருக்கவும் அவர்களைத் தடுத்து விட்டுத் தன் அன்பனுக்குச் சமையல் செய்கிறாள். செவிலித்தாய் சென்ற நேரம் அவள் புளிக்குழம்பு செய்து கொண்டிருக்கிறாள். அந்தச் சிறிய தலைவியின் கண்கள் செவிலித்தாயைக் காணவில்லை. அவளின் கண்களைத் தாளிதப்புகை சூழ்ந்து கொண்டது. அப்படியிருந்தும் அக்கண்கள் தாளிதத்தையே நோக்கிய படி இருக்கின்றன. ஒரு கை துழாவுகின்றது. அந்தக் கை துழாவிக் கொண்டிருக்கும் போதே மற்றக் கை கட்டித்தயிரைப் பிசைந்து குழம்பு செய்வதற்குப் பக்குவஞ் செய்கின்றது. அந்நேரத்தில் முந்தானைப் புடவை கொஞ்சம் இறங்குகின்றது. கை கழுவித் தொட வேண்டிய புடவை அந்தப் புடவை குழம்பைத் துழாவிய கை துழாவிய படியேயிருக்க தயிர் பிசைந்த கையைக் கழுவிக் கொள்ளாமலே அந்தத் தூய துகிலைத் தீண்டி நெகிழ்வைப் போக்குகின்றது.

அந்தத் துகிலுக்கு ஒரு மறு வந்து விட்டது. தயிர் மறு. குழம்புக்கு ஒரு பழுதும் வரவில்லை. அதனைக் கண்டதும் செவிலித் தாய்க்கு உடல் புல்லரித்தது. கண்ணீர் சொட்டியது.

1. கணவனுடன் கருத்தொருமித்து நடக்க இவள் கற்கவில்லையே எனக் கலங்கியவள் யார்?

______________________________________________

______________________________________________

2. அந்த இளம் பெண் யாருக்காக என்ன கறி சமைத்தாள்?

______________________________________________

______________________________________________

3. இங்கு கூறப்பட்ட இணையர் எத்தகையினர்?

______________________________________________

______________________________________________

4. அன்புடன் தன் கணவனுக்கு உணவு சமைக்கும் இளம் பெண்ணைப் பார்த்துக் கண்ணீர் சொட்ட நின்றவர் யார்?

______________________________________________

______________________________________________

5. இந்த இளம் பெண்ணைப் பற்றிய உமது கருத்து யாது?

______________________________________________

______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

**4) பின்வரும் கவிதைத் தலைப்பில் ஒன்றினைத் தெரிவு செய்து பத்து வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

- செக்கச் செவேல் என்று
  செம்பருத்தி பூத்த எம் முற்றம் எங்கே....

- இடிக்காதே காவலரே இடித்தாலும் எந்தன்
  எலும்போடு சதை மோதித் தமிழ் என்றே கூறும்....

- மாமரத்துக் குயிலே என் வீடு இன்னும் இருக்கிறதா....

புள்ளிகள் 10

## 5) இலக்கண/மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. ஆகுபெயர்கள் எத்தனை வகைப்படும்? காலவாகுபெயர், சினையாகுபெயர் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

______________________________

2. தரப்பட்டுள்ள சொற்களின் ளகர, ழகர, லகர வேறுபாடு புலப்படுமாறு சொல்லியங்கள் எழுதுக.

ஒலி : ______________________________

ஒளி : ______________________________

ஒழி : ______________________________

3. பின்வருவன ஒவ்வொன்றிற்கும் எடுத்துக்காட்டுத் தருக?

உவமையணி : ____________________

உயர்வுநவிற்சி அணி : ____________________

உருவக அணி : ____________________

4. இடுகுறிப்பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப்பெயர் ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

______________________________

______________________________

______________________________

5. வருவான் என்ற வினைமுற்றின் பகுதி, விகுதி, இடைநிலை என்பவற்றைத் தருக.

______________________________

______________________________

| புள்ளிகள் 15 |
|---|

**6) பந்தியை வாசித்து; மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

மக்கள் அனைவரும் விரும்புவது இன்பமே. இன்பத்தை அடைவதற்குக் கருவியாய் இருப்பது செல்வம். செல்வம் கல்விச் செல்வம், பொருட் செல்வம் என்று இருவகைப்படும். பொன், மணி முதலிய பொருட் செல்வத்திலும் கல்விச் செல்வம் சிறந்தது. ஏனெனில் பொருள் கள்வராலும் வலிய பகைவராலும் கவர்ந்து கொள்ளப்படும். சினங்கொண்ட கொடுங்கோல் மன்னரால் எடுத்துக் கொள்ளப்படும். வெள்ளத்தால் அடித்துக் கொண்டு செல்லப்படும். வெந்தழலால் வெந்து சாம்பலாய் விடும். தம்மை அண்டினோர்க்கு அளித்தால் குறையும். இவற்றிலிருந்து பொருள் அழியும் தன்மையை உடையது என்பதனை அறியலாம். மேலும் அதனை ஈட்டல், காத்தல், இழத்தல் என்பவற்றால் மக்கள் துன்புறுவர். அது பலரையும் பகையாக்கும்.

கல்வியோ எவராலும் கவரப்படமாட்டாது. தீ, வெள்ளம், முதலியவற்றால் அழியாது. பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க வளருமே அன்றிக் குறையாது. ஆதலின் இது அழியும் தன்மை உடையதன்று. நிலையானது. ஒருவனது உடல் அழிந்தாலும் அவன் கற்றகல்வி அழியாது. இதனை ஈட்டலும் காத்தலும் எளிது. இழத்தலே இல்லை. இது பகையையும் நட்பாக்கும்.

புள்ளிகள் 05

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ உமது தாய்மொழிக் கல்வி அறிவும் எம் தேச விடுதலையும்

☆ நீரும் உமது தமிழ்ப் பண்பாடும்

☆ ஆரியம் எம் இனத்தில் ஏற்படுத்திய, ஏற்படுத்துகின்ற விளைவுகள்